2018 ஜூலை 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருமன்கரடு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில், மத்திய அரசின் சார்பாக பொது நிறுவனம் ஒன்று கனிம ஆய்வு செய்வதற்கு, அந்தப் பகுதி பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். மத்திய அரசினுடைய சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டத்தின்படி, புதிய கனிமங்களை ஆய்வு செய்வதற்கு மத்திய அரசாங்கம் சில நிறுவனங்களுக்கு அனுமதி அளித்திருக்கிறது. அந்த அனுமதியின்பேரில் அந்த நிறுவனங்கள் கனிம ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன. தமிழகத்தில்* KIOCL (Kudremukh Iron Ore Company Limited) *குத்ரேமுக் இரும்புத் தாது நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பகுதியில் புதிய கனிமங்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டு, ஆய்வு செய்யப்படவுள்ளதாக மாவட்ட ஆட்சியருக்கு 4–3–2017 அன்றும், 18–9–2017 அன்றும் இயக்குநர், சுரங்கத் துறை அவர்கள் கடிதம் அளித்துள்ளார். ஆனால், மத்திய அரசாங்கத்திற்கு, மாநில அரசு எந்தவொரு இசைவினையும் வழங்கவில்லை. ஆனால், மாவட்ட ஆட்சியருக்குத் தெரியாமல், அந்தப் பகுதியிலே கனிம ஆய்வினை மேற்கொள்ளச் சென்றபோது பொதுமக்கள் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்ததன் காரணமாக, அந்த ஆய்வுப் பணிகளை இன்றைக்கு மாநில அரசு முற்றிலுமாக நிறுத்தி வைத்திருக்கிறது. பொதுமக்களுக்கு, விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுகின்ற வகையிலே மாநில அரசு எந்த கனிம நிறுவனங்களுக்கும் கண்டிப்பாக அனுமதியளிக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

முற்பகல் 11–55

(உ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ். காலையில் நீங்கள் என்னுடைய அறையில் வந்து கேட்டீர்கள். இன்றைக்கு எடுத்துக்கொள்ள முடியாது, மாண்புமிகு அமைச்சரிடம் பதில் கேட்டிருக்கிறேன், துறையிடமிருந்து பதில் வரவில்லை என்று சொல்லியிருக்கிறேன். எனவே, நீங்கள் அமருங்கள் என்று சொல்லிவிட்டேன். நீங்கள் திரும்பத் திரும்ப எழுந்து நின்றீர்களென்றால் நான் என்ன செய்வது? ஒன்றும் செய்ய முடியாது, உட்காருங்கள்.*